மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பொதுவாகப் பள்ளிக் கூடத்திற்கு மாணவர்கள் போகின்றதே நிர்ப்பந்தம் காரணமாகத்தான். பெற்றோர்களுடைய வற்புறுத்தல் காரணமாகத்தான் செல்லுகின்றார்கள். அங்கே போய்ப் படிக்கும்போது தாய் மொழியையே பயிற்சிமொழியாகக் கொண்டு படித்தால் எதிர்காலம் பாதிக்கப்படுமே என்ற அச்சம் இருக் கின்றது. அப்படிப்பட்ட நிலைமைக்குக் காரணங்கள் இருக்கின்றன. அந்தக் காரணத்தைப் போக்குவதற்காகத்தான் உள்ளேயும் வெளியிலேயும் இந் தத் தன்மைகளை உருவாக்கவேண்டிய பொறுப்பிலுள்ளவர்களாக இருக் கிறோம். அதை மெல்ல மெல்லப் போக்குவதற்கான வழி முறைகளைச் செய்துகொண்டுதான் வருகிறோம். பொதுத்துறை—அரசுத்துறை, தனியார் துறை, இன்னும் இரண்டும் சேர்ந்துள்ள துறை என்று எல்லாவற்றிலும் மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும். வேலை வாய்ப்பு பாதிக்கப்படுமோ என்ற அச்சத்தால்தான் இன்று ஆங்கிலத்திலேயே படிக்க வேண்டும் என்ற சூழ்நிலை அவர்களுக்கு இருக்கின்றது. அந்தச் சூழ்நிலையை மாற்ற வேண்டியிருக்கிறது. நீந்தத் தெரிந்துகொண்டுதான் தண்ணீரில் இறங்க வேண்டும் என்றால், நீந்தத் தெரிந்துகொள்ளவே முடியாது போய் விடும். முதலில் இறங்கத்தான் வேண்டும். கரையிலேயே நின்று கொண்டு, நீந்தப் போகிறேன் என்று யாராவது சொன்னால் முடியாது. மெல்ல மெல்ல தண்ணீரில் இறங்கச் செய்யும் சூழ்நிலையை உருவாக்கு கிறோம். உள்ளேயும் உருவாக்குகிறோம், வெளியிலேயும் அப்படிப்பட்ட சூழ்நிலையைக் கொண்டுவர முயற்சிக்கிறோம். அது நாளடைவில் நடை பெறும்.

Unrecognised Elementary Schools.

*260. *Q.* THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have sent a directive to the Commissioners of Panchayat Unions to discontinue the running of unrecognised Elementary Schools in their Unions; and

(*b*) if so, the number of such schools discontinued in the Revenue Districts of Thanjavur, Tiruchirappalli and Pudukkottai?

ஏற்பளிக்கப்படாத தொடக்கப் பள்ளிகள்.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் ஏற்பளிக்கப்படாத தொடக்கப் பள்ளிகள் நடத்துவதை நிறுத்திவிடுமாறு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கு உத்தரவு ஒன்றை அரசு அனுப்பியுள்ளது உண்மையா ?

1975 ஏப்ரல் 21]

(இ) ஆமெனில், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை வருவாய் மாவட்டங்களில் அவ்வாறு நிறுத்தப்பட்ட பள்ளிகளின் எண்ணிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எஸ். கணபதி : ஊராட்சி ஒன்றியங்களுக்கு இதுபோன்ற சுற்றறிக்கையொன்று அனுப்பப்பட்டுள்ளது. அதன் நகலும் என்னிடம் இருக்கின்றது. இதுபோன்று அங்கீகாரம் இல்லாது பள்ளிக்கூடங்களை நடத்துவது கூடாது என்று இயக்குனர் அறிவுரை கூறி பஞ்சாயத்து யூனியன்களுக்கு அனுப்பியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில்தான் இந்த வினா எழுப்பப்பட்டிருக்கின்றது. அனுப்பப்பட்டதா என்று மீண்டும் அரசு பரிசீலனை செய்யுமா என்று கேட்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முன் அனுமதி பெறாமல் பள்ளிக்கூடங்களை நடத்தக்கூடாது என்ற உத்திரவிருந்துகொண்டு தான் இருக்கின்றது. இதை எண்ணிப்பாராமல் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்கள் பள்ளிக்கூடங்களைத் துவக்கி நடத்திக்கொண்டு வருகின்றார்கள். நடத்திக்கொண்டு வரும் நேரத்திலே அவற்றுக்கு ரெகக்னிஷன் வேண்டும் என்று அனுமதி கோருகின்றார்கள். அந்த வகையில்தான் முன்பே அதற்கான தன்மைகளை எடுத்துக்காட்டியிருக்கிறோம்.

முதலில் 294 "நான்-ரெகக்னைஸ்ட் பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்களும்" 152 "நான் - ரெகக்னைஸ்ட் ஸ்டாண்டர்ட்ஸும்" இருந்தன. அவற்றுக்கெல்லாம் மாணவர்களுடைய நலன்களைக் கருத்தில்கொண்டு 1969–70–ல் அவற்றிற்கு அனுமதி வழங்கினோம். பிறகும் ஏற்கனவே அனுமதி பெறாது நடந்துவந்த 23 பஞ்சாயத்து பள்ளிக்கூடங்களுக்கும் 7 அனுமதி பெறாது நடத்திவந்த வகுப்புகளுக்கும் தஞ்சை மாவட்டத்தில் அனுமதி அளித்திருக்கிறோம். திருச்சி மாவட்டத்தில் 1969–ம் ஆண்டிலே 76 நான்–ரெகக்னைஸ்டு பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடங்களுக்கும் 12 நான்–ரெகக்னைஸ்டு ஸ்டாண்டர்ட்ஸ்க்கும் அனுமதி கொடுத்திருக்கிறோம். இப்போது இதுபற்றி 8—1—1975–ல் சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறோம், பஞ்சாயத்து யூனியன்களுக்கு. "முன் அனுமதி பெறாமல் பள்ளிகளைத் துவக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். பார்த்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு அவர்களுடையதுதான்" என்ற அளவிற்கு பஞ்சாயத்து யூனியன் ஆணையர்களுக்கு அனுப்பியிருக்கின்றோம்.

திரு. வி. வெங்கா : ஊராட்சி ஒன்றியம் துவக்கப்பட்ட காலத்தில் "கல்வி இலாகாவின் முன் அனுமதி எதையும் எதிர் பாராது, தேவைக்கு ஏற்ப ஊராட்சி ஒன்றியங்கள் பள்ளிக்கூடங்களைத் துவக்கலாம்" என்ற விதி இருந்தது. அதை ஒட்டி துவக்கப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு கல்வி இலாகாவில்; தற்காலிக அனுமதியை வழங்கினார்கள். இப்படி தற்காலிக

அனுமதியின் அடிப்படையிலேயே கடந்த பத்து ஆண்டு காலமாக தொடர்ந்து சில பள்ளிக்கூடங்கள் நடந்துவந்திருக்கின்றன. இப்போது, கல்வி இலாகா சொல்லும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்ற காரணம் காட்டி பத்தாண்டு காலமாக நடந்துவந்த அந்தப் பள்ளிகள் கட்டாயமாக மூடப்படவேண்டும் என்ற உத்தரவினைக் கல்வி இலாகா இப்போது வெளியிட்டிருக்கின்றது. பத்தாண்டு காலமாக நடந்து வந்ததை, இப்போது மூடுவது என்றால் பல சங்கடங்கள் ஏற்படக்கூடும். எனவே கல்வி இலாகா இதை மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலேயே, "சில நிபந்தனைகள் நிறைவேற்றப் படாததன் காரணமாக அனுமதி மறுக்கப்படுகிறது" என்று சொல்லி யிருக்கின்றார்கள். நிபந்தனைகளை நிறைவேற்றிவைத்தால், வேண்டிய அனுமதியினைத் தருவதில் தவறேதும் இருக்கமுடியாது. அவற்றை நிறை வேற்றாமல் இருக்கும் பள்ளிகள், கட்டுப்படியாகாத நிலையில் "அன்—எகனாமிக்" என்ற அடிப்படையில் இருந்தால் அவற்றை நடத்துவது பஞ்சாயத்து யூனியன்களுக்கும் நல்லதல்ல, அரசுக்கும் நல்லதல்ல. ஆகவே ஏற்கனவே நிபந்தனைகள் என்று இருந்தால், அவற்றைப் பூர்த்தி செய்வதுதான் நியாயமாகும். எப்படியோ அனுமதியைப் பெற்றுவிடலாம் என்று பள்ளிக்கூடங்களைத் துவங்கிவிடுகிறார்கள். அதனால் பல இடையூறுகள் ஏற்படுகின்றன. இதனால் பக்கத்து பக்கத்துப் பள்ளிக்கூடங்களுக்கு இடையிலும் தொல்லைகள் ஏற்படுகின்றன. ஆக இரண்டு பள்ளிக்கூடங்களையுமே நடத்த முடியாத ஒரு சூழ்நிலை உருவாகிறது. இந்த அனுமதியைக் கவனிக்காமல், எப்படியாவது அனுமதியைப் பெற்றுவிடலாம் என்று, பஞ்சாயத்து யூனியன்கள் ஜனநாயகத்தின் அடிப்படையில் நடைபெறுகின்ற காரணத்தினால், அந்த ஊரில் இருக்கிறது, எங்கள் ஊரில் பள்ளிக்கூடம் இல்லை. எங்களுக்கு என்று தனியாக வேண்டாமா? ஒரு பர்லாங்கு தூரத்தில் உள்ள பக்கத்து ஊரில் ஒரு பள்ளிக்கூடம் இருந்தாலும், தங்கள் ஊரிலும் ஒன்று வேண்டும் என்று சொல்லி ஆரம்பித்துவிடுகின்றார்கள். பிறகு அனுமதி வேண்டும் என்று கேட்கின்றார்கள். சில குறிப்பிட்ட நிபந்தனைகளை நிறைவேற்றாததன் காரணமாகத்தான் அனுமதி கொடுக்கத் தயங்குகிறோம். பத்தாண்டு காலமாக நிபந்தனைகளை நிறைவேற்றாமல் இருந்தால் இவற்றை நிறைவேற்றினால் மாணவர்களுக்கும் நல்லது, ஆசிரியர்களுக்கும் நல்லது.

திரு. கே, எஸ். கணபதி : தலைவரவர்களே, இதைப் போன்று அரசின் அனுமதியைப் பெறாமல் துவக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடங்கள் எவ்வளவு மூடப்பட்டிருக்கின்றன என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படி ஏதாவது மூடப்பட்டதாக என்னிடம் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால், விவரம் சேகரித்துக் கொடுக்கலாம். அப்படி மூடப்பட்டிருந்தாலும்கூட ஒன்று இரண்டுதான் இருக்கலாம்.

திரு. வி. வெங்கா : நிபந்தனை என்று சொல்லியது மாணவர்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்ததுதான். பத்தாண்டு காலமாக அந்த ஊரிலே போதுமான மாணவர்கள் இருந்தார்கள். ஆனால், இப்போது அரசு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தினை மிகத் தீவிரமாக நிறைவேற்றி வருவதன் காரணமாக அங்கே மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டது. எனவேதான் துவக்கும் நேரத்தில் இருந்தபோது போதுமான அளவிற்கு இருந்த மாணவர்களின் எண்ணிக்கை இப்போது வெகுவாகக் குறைந்து விட்டது. எனவே, அந்தப் பள்ளிக்கு ரெகக்னிஷன் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தினை தீவிரமாக நடத்தியதால் மாணவர்களின் எண்ணிக்கை அங்கே குறைந்தது என்றால், அதை மிக மிக வரவேற்கலாம். ஆனால், ஏற்கனவே ஒரு பள்ளிக்கூடம் இருந்து அங்கேயே மிகக் குறைந்த அளவில் மாணவர்கள் எண்ணிக்கை இருக்கிறது என்றால், அங்கே இன்னொரு பள்ளிக்கூடம் துவக்குவது என்றால், யோசிக்கத்தான் வேண்டும். கிட்டத்தட்ட 61 உயர்நிலைப் பள்ளிக்கூடங்களிலே—ஒவ்வொரு பள்ளியிலும் மூன்று அல்லது நான்கு மாணவர்கள்தான் எஸ்.எஸ்.எல்.ஸி.யில் இருக்கின்றார்கள். ஒரு பள்ளிக்கூடத்தில் எஸ்.எஸ்.எல். ஸி.க்கு ஒரே ஒரு மாணவர். அதற்காக ஒரு தலைமை ஆசிரியர், பி.டி. ஆசிரியர்கள் மூன்று பேர் என்றால் இதனால் பணமும் விரயமாகிறது, இது நாட்டிற்கும் நல்லதில்லை. இருக்கும் பள்ளிக்கூடமே இந்த நிலைமையில் இருந்தால், அந்த இடத்தில் இன்னொரு பள்ளி எதற்காக என்று அந்த நிலையில்தான் அதற்கு அனுமதி மறுக்கிறோமே தவிர, நியாயம் என்று ஏற்பட்டு, சுற்றுப்புறத்தில் ஐந்தாறு மைல்களுக்கு அது ஒரு பள்ளிதான் என்று இருந்தால், அதற்கு நாம் அனுமதி கொடுக்க ஆயத்தமாக இருக்கிறோம்.

Proforma of Agreement to be entered into between management of Aided Colleges and Teachers working in them.

*261 *Q.*—Thiru K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state:—

(*a*) whether it is a fact that the University of Madras has prescribed a Proforma of an Agreement to be entered into by the management of the Aided Colleges and the Teachers working in such Colleges ;

(*b*) if so, whether the managements of Aided Colleges have the right to include many other clauses in the agreement ;

(*c*) whether it is a fact a Women's College in Tiruchirappalli has prepared an agreement which contains many other sub-clauses beyond the ones that have been prescribed by the University; and